

நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சி மகாலட்சுமி நகர் விரிவு 7 பகுதியில் புதியதாக உருவாக்கப்பட்ட பேராசிரியர் க.அன்பழகன் விளையாட்டு பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர் எம்.கே.டி. கார்த்திக் உள்ளிட்டோர் உள்ளனர்.

### கேந்திரிய வித்யாலயா

# பள்ளிக்கூட நிலத்திற்கு குத்தகைப் பணம் நிர்ணயித்திடுவீர்!

## ஒன்றிய கல்வி அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜுன் 11-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஒன்றிய கல்வித்துறை அமைச்சருக்கு இரயில்வே துறை கேந்திரிய வித்யாலயா பள்ளி கட்டுவதற்காக வழங்கும் நிலத்திற்கு குத்தகை பணம் நிர்ணயித்துத் தர கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

ஒன்றிய அரசு அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்னும் கொள்கை அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை கடந்த பல வருடங்களாக எடுத்து வருகிறது. அரசு மேலும் தரமான கல்வி வழங்கி சிறந்த குடிமகன்களை உருவாக்க வேண்டும் என்று விரும்புகிறது. இதனைக் கருத்தில் கொண்டே சுமார் 500 புதிய கேந்திர வித்யாலயா பள்ளிகளை நாடெங்கும் துவங்க திட்டம் தீட்டியுள்ளது. இதன் மூலம் பணி மாறுதலுக்கு உள்ளாகும் ஒன்றிய அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களின் குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்க திட்டமிட்டுள்ளது.



எனது வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி 30 லட்சம் மக்களை கொண்ட பெரிய தொகுதி ஆகும். இந்த தொகுதியில் பல ஒன்றிய அரசு நிறுவனங்களும் பல நாட்டு வணிக நிறுவனங்களும் இரண்டு துறைமுகங்களும் ஒன்றிய மாநில அரசு அலுவலகங்களும் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பொதுமக்களும் நிறைந்து இருப்பினும் இத்தொகுதியில் ஒரு கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூட இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பகுதியில் வாழும் மக்கள் தரமான கல்வி வழங்கும் கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கூடம் இங்கு துவங்கப்பட வேண்டும் என காத்துக் கொண்டுள்ளனர்.

இப்பகுதியில் ஒரு கேந்திரிய வித்யாலயா பள்ளி துவங்கப்பட வேண்டும் என்பதற்காக தென்னக இரயில்வேயின் பொது மேலாளருக்கு இப்பகுதியில் இரயில்வே துறைக்கு சொந்தமாக உள்ள நிலத்தை கேந்திர வித்யாலயா பள்ளி துவங்குவதற்காக நீண்ட நாள் குத்தகை அடிப்படையில் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். இதுகுறித்து முறைப்படி கடிதம் எழுதுமாறு கேந்திரிய வித்யாலயா சங்காதத்தையும் கேட்டுக் கொண்டேன். அதன்படி கேந்திர வித்யாலயா சங்காதன் 3.3.2023 தேதியிட்ட கடிதத்தில் கோரி உள்ளபடி நீண்ட நாள் அடிப்படையில் 8 ஏக்கர் நிலத்தை குத்தகை அடிப்படையில் வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இரயில்வே நிலத்தை குத்தகையில் வழங்க வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மேற்படி நிலத்தை அறுபது ஆண்டுகளுக்கு குத்தகையில் வழங்கவும் ஒரு சதுர மீட்டர் நிலத்துக்கு ரூபாய் ஒன்று வீதம் செலுத்த வேண்டும் என கூறியுள்ளது.

இது Railway Board மாஸ்டர் சுற்றறிக்கையில் ரயில்வே மேலாண்மை கொள்கையின் படி நிர்ணயிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. குத்தகை பணத்தை ஆண்டுதோறும் வழங்கலாம் அல்லது மொத்த தொகையாகும் முன்கூட்டியே வழங்கினால் 7% தள்ளுபடி செய்து பெற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கேந்திரிய வித்யாலயா சங்காதன் கொள்கைப்படி குத்தையாக பெரும் மொத்த நிலத்துக்கும் ஆண்டுக்கு ரூபாய் 1 மட்டும் தர வேண்டும் என்று உள்ள படியால் கேந்திரிய வித்யாலயா சங்காதன் இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதுகுறித்து நான் தங்களிடம் கோரிக் கொள்வது என்னவெனில் சென்னை போன்ற பெருநகரங்களில் நிலம் கிடைப்பது மிகவும் அரிதானது இரயில்வே நிர்வாகம் நிர்வாக விதிப்படி நிலத்தை குறைந்த தொகையில் அதாவது சதுர மீட்டருக்கு ரூபாய் 1 வீதம் ஏக்கருக்கு ரூபாய் 4047 வீதம் தருவதற்கு முன் வந்துள்ளது. எனவே கேந்திரிய வித்யாலயா சங்காதன் விதிமுறை களை தளர்த்தி மேற்படி இரயில்வே நிலத்தை பெறுவதற்கு வழிவகுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

### மின்கட்டண உயர்விலிருந்து மக்களைப் பாதுகாத்த முதல்வரின் பாங்கு!

# அனைத்துத் தரப்பு மக்களிடமும் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜுன் 11-

தமிழ்நாட்டில் வீடு களுக்கான மின்சாரத்தில் 100 யூனிட் வரை அரசு இலவசமாக வழங்குகிறது. மின் கட்டண உயர்விலிருந்து மக்களை பாதுகாத்த முதல்வ ரின் பாங்கு, அனைத்துத் தரப்பு மக்களிடமும் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இது மக்களுக்கான அரசு என்று நிரூபிக்கப்ப ட்டுள்ளது. என்று ‘தினகரன்’ நாளேடு 10.6.2023 தேதியிட்ட இதழில் ‘மக்களின் அரசு’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

தமிழகத்தில் வீடுகளுக்கான மின்சாரத்தில் 100 யூனிட் வரை, தமிழக அரசு இலவசமாக வழங்குகிறது, அதற்குமேல் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதாவது, 100 முதல் 200 யூனிட் வரை, 200 முதல் 500 யூனிட் வரை, 500 யூனிட்டிற்கு மேல் என்று பல விகிதங்களில் மின்கட்டணம் கணக்கிடப்படுகிறது, இதில், நிலைக்கட்டணமும் அடங்கும். 100 யூனிட்டுக்கு 0 கட்டணம், 110 யூனிட்டுக்கு ரூ.35, 200 யூனிட்டுக்கு ரூ.170, 210 யூனிட்டுக்கு ரூ.260, 290 யூனிட்டுக்கு ரூ.500, 390 யூனிட்டுக்கு ரூ.800, 500 யூனிட்டுக்கு ரூ.1,130, 510 யூனிட்டுக்கு ரூ.1,846, 600 யூனிட்டுக்கு ரூ.2,440, 700 யூனிட்டுக்கு ரூ.3,100, 800 யூனிட்டுக்கு ரூ.3,760, 1,000 யூனிட்டுக்கு ரூ.5080, 1,200 யூனிட்டுக்கு ரூ.6,400 என கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட நிர்வாக குளறுபடி காரணமாக, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒட்டு மொத்த நிதிநிலை மோசமடைந்தது. மின்வாரியத்துக்கு பெரும் நிதிச்சுமை ஏற்பட்டது. மேலும், ஒன்றிய அரசின் 9.11.2021 தேதியிட்ட ஆணையின்படி மின் எரிபொருள் மற்றும் கொள்முதல் விலை உயர்வினை உடனுக்குடன் நுகர்வோரிடமிருந்து வசூல் செய்வது கட்டாயமாக்கப்பட்டது. அதன்படி, மின்கட்டணத்தை உயர்த்தி, நுகர்வோரிடமிருந்து மாதந்தோறும் பெறவேண்டும் எனவும் ஒன்றிய அரசு உத்தரவிட்டது.

ஒன்றிய அரசின் இந்த உத்தரவை ஏற்று, வாரியத்தின் நிதிச்சுமையை குறைக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார



தினகரன்

ஜுன் 10, 2023 சனிக்கிழமை

மக்களின் அரசு

தமிழகத்தில் வீடுகளுக்கான மின்சாரத்தில் 100 யூனிட் வரை, தமிழக அரசு இலவசமாக வழங்குகிறது. அதற்குமேல் பயன்படுத்தும் மின்சாரத்துக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதாவது, 100 முதல் 200 யூனிட் வரை, 200 முதல் 500 யூனிட் வரை, 500 யூனிட்டிற்கு மேல் என்று பல விகிதங்களில் மின்கட்டணம் கணக்கிடப்படுகிறது. இதில், நிலைக்கட்டணமும் அடங்கும். 100 யூனிட்டுக்கு 0 கட்டணம், 110 யூனிட்டுக்கு ₹35, 200 யூனிட்டுக்கு ₹170, 210 யூனிட்டுக்கு ₹260, 290 யூனிட்டுக்கு ₹500, 390 யூனிட்டுக்கு ₹800, 500 யூனிட்டுக்கு ₹1,130, 510 யூனிட்டுக்கு ₹1,846, 600 யூனிட்டுக்கு ₹2,440,

ஒழுங்குமுறை ஆணையம் கடந்த 09.09.2022 அன்று, 2022-2023 முதல் 2026-2027 வரை 5 ஆண்டுகளுக்கான கட்டண உயர்வை பல்லாண்டு மின்கட்டண வகையில் (MYT) வழங்கியது. ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 1 முதல் 4.7 சதவீதம் மின்கட்டணம் உயர்வு முறையை அறிவித்தது.

இந்த நடைமுறையை ஆய்வுசெய்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆணையத்தின் உத்தரவை செயல்படுத்தும்போது பொதுமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார். அதன்படி, கட்டண உயர்வு விகிதம் மறுஆய்வு செய்யப்பட்டு, 4.7 சதவீதத்தில் இருந்து 2.18 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஆனால், இதுவும் கூடாது என தமிழக முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அத்துடன், இந்த 2.18 சதவீத கட்டண உயர்வை தமிழக அரசே மானியமாக வழங்கும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளார். முதல்வரின் இந்த அறிவிப்பால், வீட்டு மின்இணைப்புகளுக்கு எவ்வித கட்டண உயர்வும் இருக்காது. வேளாண் இணைப்புகள், குடிசை இணைப்புகள், வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம், கைத்தறி, விசைத்தறிகள் போன்றவைகளுக்கு அளிக்கப்படும். இலவச மின்சார சலுகை எப்போதும் போல் தொடரும். வணிக மற்றும் தொழில் அமைப்புகளுக்கு மட்டுமே யூனிட் ஒன்றிற்கு 13 பைசா முதல் 21 பைசா வரை மிக குறைந்த அளவில் மின் கட்டணம் உயரும்.

மின்கட்டண உயர்வில் இருந்து, ஏழை மக்களை பாதுகாத்த தமிழக முதல்வரின் இந்த பாங்கு, அனைத்து தரப்பு மக்களிடமும் பெரும் பாராட்டை பெற்றுள்ளது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பெரும் நிம்மதி அடைந்துள்ளனர். இது மக்களுக்கான அரசு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்குப்பகுதி 168 அ வட்டம் கிண்டி பேருந்து நிலையம் அருகில் 270 லிட்டர் கொள்ளளவு உள்ள தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சைதை கிழக்குப் பகுதி செயலாளர் 13-வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், 168-வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், ச.சேகர், கோ.தனசேகரன், ஆர்.கிருஷ்ணகுமார், ஏ.சீனிவாசன், ஜி.என்.நாராயணன், பார்சன் கே.லோகு, பி.ஆகாசம், முத்துமாரியப்பன், ஜி.வெங்கடேஷ், கே.சிவாஜி, டி.இளையராஜா, கி.சிவபிரகாஷ், குணாமேகநாதன், ஜே.தவமணி, எம்.எஸ்.எம்.சேக், வா.கதிர்வேல், குருமூர்த்தி, எம்.ஸ்ரீதர், க.ஆதிகேசவன், க.ஆறுமுகம், குணாகுருமூர்த்தி, சி.செல்வதுரை மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்!

சில நாள்களுக்கு முன்பு, சென்னையில் நடைபெற்ற, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய, தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமாகிய நம் தளபதியவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு செய்தி । மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புடையது!

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யார், யார் வெற்றி பெற வேண்டும் என்பதை விட, யார் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்து விடக்கூடாது என்பது முக்கியமானது என்று கூறியிருக்கிறார்.

இது எதிர்மறைச் சிந்தனை இல்லையா என்றுதோன்றும். எதிர்மறைச்சிந்தனைதான். ஆனால் சில நேரங்களில், வரலாற்றில் இப்படிப்பட்ட சிந்தனைகள் தேவைப்பட்டிருக்கின்றன!

பொது எதிரியை வீழ்த்துவதற்கு, கருத்து வேறுபாடுகள் உள்ள கட்சிகள் கூட ஒருங்கிணைந்து நின்று, களத்தைச் சந்திப்பது இயல்பானதும், தேவையானதுமாகும்! இன்றைய உடனடித் தேவை, ஒரு தீய சக்தியை ஆட்சியில் இருந்து அகற்றுவதுதான் என்பதை உணர்ந்து நம் தலைவர் பேசியிருக்கிறார்!



பேராசிரியர்

**சுப.வீரபாண்டியன்**

இது எப்படிக் கலைஞரின் கனவாகும் என்ற ஐயமும் எழலாம். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் நின்று தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் உருவாக்கியுள்ள சமத்துவ, சமூக நீதிச் சிந்தனைகள் நிலை பெற வேண்டும் என்பது அவருடைய கனவாகத்தானே இருக்க முடியும்! அவை தொடர்ந்து நிலைத்திட வேண்டுமானால், அவற்றைக் குலைக்கிற, அழிக்கத் துடிக்கிற ஒரு கட்சி ஒன்றிய அரசில் ஆட்சியில் இருக்கக் கூடாது என்பதுதானே சரியானது!

இன்றைக்கும் தமிழ்நாட்டில் நடப்பதைப் போல், சுயமரியாதை, சாதி மறுப்புத் திருமணங்கள் வடநாட்டில் வெளிப்படையாகப் பொதுவான அரங்குகளில், அவ்வளவு எளிதாக நடந்து விட முடியாது! தமிழ்நாட்டில் இருப்பது போல் கடவுள், மதம் தொடர்பான வெளிப்படையான விவாதங்கள் வடநாட்டில் நடக்க வாய்ப்பில்லை. இவை திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள்!

இப்போதும் கூட 14, 17 வயதுப் பெண்களுக்குத் திருமணம் ஆவதும், அவர்கள் கருவுற்று இருப்பதும் மனுநீதி ஏற்றுக்கொண்டு உள்ள ஒன்றுதான் என்று குஜராத் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது! மனுநீதியே இன்றைக்கும் ஆரிய பார்ப்பனச் சட்டமாக அங்கு உள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் சமூக நீதிக்குத்தான் என்றும் தலைமையிடம் என்பதை நாம் அறிவோம்!



மனுநீதியைத் தங்களின் சட்டமாக வைத்திருக்கும் ஆர்.எஸ்.எஸ். ஆட்சி, மறுபடியும் ஏற்பட்டு விடாமல் தடுப்பதுதான் கலைஞரின் நினைவை நாம் போற்றுவதாகும் என்று முதலமைச்சர் கூறியிருக்கிறார். அதனை நெஞ்சில் கொண்டு, இன்றிலிருந்தே பணியாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் நம் அனைவருக்கும் இருக்கிறது!

அதற்கு ஏற்ற சூழலும் இந்திய அளவில் இன்று கனிந்து வருகிறது! பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் வரும் 23ஆம் தேதி பாட்னாவில் கூட்டி இருக்கும் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் இந்த வெற்றிக்கு வழி வகுக்கக் கூடியது! மேற்கு வங்கத்தில் எதிரும் புதிருமாக பிரிந்து நின்ற காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும், கேரளாவில் போட்டியிடும் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் ஒரே அரங்கிற்குள் அவர் கூட்டி வருகிறார்! திமுக, ஆம் ஆத்மி போன்ற வலிமையான கட்சிகளும் அன்று பங்கேற்கின்றன. அந்தக் கூட்டம், ஒரு நம்பிக்கைக் கீற்றை நாட்டுக்குத் தந்திருக்கிறது!

இந்தியா முழுவதும் தாங்களே வலிமையாக இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை பி.ஜே.பி. ஏற்படுத்த முயன்றாலும் உண்மை அப்படி இல்லை! ஏற்கனவே தென்னிந்தியா முழுவதும் அவர்கள் துடைத்து எறியப்பட்டு இருக்கிறார்கள்! வடஇந்தியாவிலும் கூட, பஞ்சாப், ராஜஸ்தான், தில்லி, பீகார் முதலிய மாநிலங்களில் அவர்களின் ஆட்சி இல்லை. மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், ஆட்சியை அவர்கள் குறுக்கு வழியில் தான் பெற்றிருக்கிறார்கள். எனவே உத்தர பிரதேசம்,குஜராத் தவிர அவர்கள் வலிமையாக அமர்ந்திருக்கும் பெரிய மாநிலங்கள் வேறு எதுவும் இல்லை!

அனைவரும் ஒன்று கூடி உழைத்தால், கைக்கெட்டும் தொலைவில்தான் வெற்றி இருக்கிறது! நம்பிக்கையோடு இருப்போம், கலைஞரின் கனவைக் காலம் நிறைவேற்றும்!

நன்றி : **கருஞ்சட்டைத் தமிழர்**
10.6.2023

### திருப்பத்தூரில் இன்று

# பேரூராட்சி துணைத் தலைவர் இல்லத் திருமணம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, ஜுன் 11-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவரும், மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவருமான ஆர். கான்முகமது சகிலா பானு சகோதரர் ஆர்.ராஜா முகமது - மும்தாஜ் பேகம் மகள் ஆர். தஸ்லிமா பானுவிற்கும் காரைக்குடி பி.பகுருதீன் - ஷகீராபானு மகன் முகமது சஹில் ஆகியோரது திருமணம் இன்று (11ம் தேதி ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணியிலிருந்து 12.30 முப்பது மணிக்குள் திருப்பத்தூர் செந்தாமணி திருமண மஹாலில் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர் . பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சரும் மாநில இலக்கிய அணிபுரவலருமான மு.தென்னவன், மலேசியா லோட்டஸ்குழுமம் தொழில் அதிபர் துரை சிங்கம் பிள்ளை ஆகியோர் முன்னிலையில்நடைபெற உள்ள திருமணத்தில் மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் கலந்து கொள்கிறார்கள்.

திருமண விழா ஏற்பாடுகளை ஹாஜி ஆர். அப்துல்லா திருமதி முஜிபுனிஸா, ஆர். ராஜா முகமது திருமதி மும்தாஜ் பேகம் ஆர். கான் முகமது திருமதி சகிலாபானு, பி. பகுருதீன் மற்றும் குடும்பத்தினர் செய்து வருகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் 1200 மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைத்தார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மற்றும் வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதா ஜீவன், மாநகராட்சி மேயர் என்.பி.ஜெகன் பெரியசாமி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் கோட்டூர்சாமி பொதுமக்கள் கழக நிர்வாகிகள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.